

இலக்கியன் முர்ஷித்
நஞ்சுண்ட நிலவு

இலக்கியன் முர்ஷித்

# நஞ்சுண்ட நிலவு

வெளியீடு

**Nanjunda Nilavu**
**by**
**Ilakyan Mursith**

Text:Poem ❧ First Edition:2017 ❧ Copyright: MAM.Mursith ❧ Pages: 96 ❧ Size:A5 ❧ Publishing Serial No : 01 ❧ Published by : Ahara aayutham, 221,2nd Cross Street,Nintavur-13, 32340, Sri Lanka ❧ Tel No :094 778 486 168 ❧ Email : aharaaayutham@gmail.com ❧ Cover Designed : Roy Kannthali, Kanyakumari, India ❧ ❧ Printed : AJ Prints ❧ ISBN: 978-955-7256-00-9

**Price : Rs . 400**

உம்மா.. வாப்பா..
உடன் பிறப்புக்களுக்கு..

தனிமை,
கவிதையாக மாறட்டும்;
அதைவிடப் பொருத்தமான துணை
வேறு யார்தான்
இருக்கமுடியும்?



## "அகரம் ஆயுதம்" ஆனந்தமடைகிறது

"அகர ஆயுதம்" எனும் கலை,இலக்கிய மற்றும் சமூக செயற்பாட்டுத் தளமானது இலங்கையின் தமிழ் மொழிப் பரப்பில் இயங்கிவருகின்றது.

கலை, இலக்கிய மற்றும் சமூக செயற்பாடுகள் சோர்வு நிலைக்குள்ளாகும் போதெல்லாம் "அகர ஆயுதம்" புத்தூக்கத்தை ஏற்படுத்துவதில் மேலதிக கரிசனை கொண்டு மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் செயற்பட்டு வருவதோடு பல்வேறு காரணங்களால் மௌனமான படைப்பாளிகளை தட்டி எழுப்பி நம்பிக்கை விதைத்து மீண்டும் உயிர்ப்பிக்கும் ஆயுதமாக "அகர ஆயுதம்" ஆர்வம் காட்டுகின்றது.

கடந்த காலங்களில் மானுட இருப்பிற்கான மையமாகக் கருதப்படும் விவசாயத்துறை சார்பான பல்கலைக்கழக மாணவர்களுக்கும் விவசாயிகளுக்குமான விசேட வழிகாட்டல் நூல்களை வெளியிட்டிருக்கும் அகர ஆயுதம்; கலை, இலக்கியப் படைப்புக்களை வெளிக்கொண்டு வருவதிலும் தனது கவனத்தை தற்போது திருப்பியிருக்கிறது. அதனொரு அங்கமாக பரீட்சனின் முரண்பாட்டு சமன்பாடுகள் கவிதைத் தொகுதியை அண்மையில் பதிப்பித்து வெளியிட்டும் வைத்துள்ளது.

பல புதிய கலை, இலக்கிய அமைப்புக்களின் உருவாக்கத்துக்கும் உந்துதலாயிருந்த அகர ஆயுதம் தரமான கலை, இலக்கிய வெளியீடுகளுக்கும் இலங்கையில் முன்னோடியாய் இருந்திடும் ஆவலுடன்

இலக்கியப் பிரதிகளின் வெளியீட்டு முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தியுள்ளது. அந்தவகைளியில் அகர ஆயுதம் கலை, இலக்கிய மற்றும் சமூக செயற்பாட்டுத் தளத்தின் ஆரம்பகர்த்தாவான இலக்கியன் முர்ஷித்தின் கவிதைகளை "நஞ்சுண்ட நிலவு" என்ற பெயரில் பிரதியாகத் தொகுத்து வெளியிடுவதில் அகர ஆயுதம் ஆனந்தம் கொள்கிறது.

தரமான கலை, இலக்கியப் பிரதிகளை வெளிக்கொண்டுவரும் முயற்சியை அகர ஆயுதம் இன்னும் காத்திரமாக தொடர்ந்தும் முன்னெடுக்கும் என்ற நம்பிக்கையுடன் இக்கவிதை தொகுப்பை உங்கள் கரங்களில் ஒப்படைப்பதில் மகிழ்ச்சியடைகிறது. அத்தோடு அகர ஆயுதத்தின் வெளியீட்டு முயற்சிகளுக்காக கரம் கோர்த்து உதவிய அனைத்து உறவுகளுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்..

"அகர ஆயுதம்" வெளியீட்டகம்,
221, 2ம் குறுக்குத் தெரு,
நிந்தவூர்-13 (32340)
இலங்கை.
akaraaayutham@gmail.com

# இலக்கியன் முர்ஷித்தின் இலக்கியப் பயணம்..

கலாபூஷனம் அல்ஹாஜ் எஸ். அகமது JP

கிழக்கிலங்கையின் நிந்தவூர் பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மது அனிபா, சித்தி ஹனூன் தம்பதிகளின் கனிஸ்ட புதல்வன் முர்ஷித், தனது ஆரம்பக்கல்வியை நிந்தவூர் இமாம் றூமி வித்தியாலயத்திலும், உயர் கல்வியை நிந்தவூர் அல்-மதீனா மகா வித்தியாலயத்திலும் கற்றார். இவரது முழுப்பாடசாலைக் காலதத்திலும் நானே அதிபராக கடமைபுரிந்துள்ளேன்.

இவர் என் தந்தைவழி உறவினராவார். எனது மகளும் இவரது வகுப்பிலேயே கல்விகற்று வந்தமையால் பெரும்பாலும் பாடசாலைக்குச் செல்லும் வழியில் இவரை நானே எனது வண்டியில் ஏற்றிச்செல்வேன். அந்தவகையில் இவரின் குடும்ப நிலை, பாடசாலைக்காலம், கல்வி வளர்ச்சி என்பவெற்றை நான் நன்றாகவே அறிந்து வைத்துள்ளேன்.

முர்ஷித் தனது ஆரம்ப கல்விக் காலத்தில் கற்றலில் ஈடுபாடு குறைந்தவராகவே காணப்பட்டார். ஆனால் உயர் கல்விக் காலகட்டத்தில் மிகுந்த கற்றல் ஈடுபாடும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் கூடிய அக்கறையும் உள்ளவராகவும், ஆசிரியர்களுக்கு மிகவும் விருப்பமுள்ள மாணவராகவும் தன்னை அடையாளப்படுத்தியிருந்தார்

இவர் வணிகத்துறை மாணவராக இருந்தபோதும், கலை இலக்கியத்துறையில் கூடிய பங்களிப்பும்,

தலைமைத்துவ செயற்பாடுகளில் அதிக அக்கறையும் கொண்டு சிரேஸ்ட்ட மாணவத் தலைவராகவும், உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவராகவும், தமிழ் இலக்கிய ஆர்வலர் கழகம் மற்றும் அகர ஆயுதம் (கலை இலக்கிய செயற்பாட்டுத்தளம்) ஆகிய கழகங்களின் தலைவராகவும், சகமாணவர்களையும் தன்னோடு இணைத்து செயற்பட்டுக் கொண்டிருந்தார். அதனால் இவரை ஆசிரியர்கள் “இலக்கியன்” என அழைக்கத் தொடங்கினார்கள். இதுவே இன்று இவர் புனைப்பெயராக கொள்ள காரணமானது என நினைக்கின்றேன்.

அது மட்டுமல்லாது இவரது தலைமையிலேயே டெங்கு ஒழிப்பு வாரம், மரம் நடுகை தினம், மாணவர் மன்றங்கள், கலை இலக்கிய நிகழ்வுகள், கவியரங்குகள், பட்டிமன்றம், விவாத அரங்குகள் பல நடைபெற்றதை ஞாபகமூட்டுகின்றேன். இவரும் இவரின் சகமாணவர்களும், அவர்களின் காலப் பகுதியும் பாடசாலைக்கு ஒரு பொற்காலமாய் அமைந்தது பாராட்டப்பட வேண்டியதாகும்.

தனது பாடசாலைக் காலத்திலேயே இலங்கை, இந்திய சஞ்சிகைகளுக்கு எழுதிக்கொண்டிருந்தார். அத்தோடு “விதைப்பு வெளி” என்ற பிரசுரப் பலகை ஒன்றை நிறுவி ஆர்வமுள்ள மாணவர்களின் ஆக்கங்களை வெளியிட்டு முன்மாதிரியாக திகழ்ந்தார். இவைகளுக்கு பாடசாலை அதிபர் என்ற வகையில் எனது ஆலோசனையும், வழிகாட்டலும் இவருக்கு வழங்கி வந்தேன்.

தற்போது கவிதைகள், கட்டுரைகள், நாட்டாரியல் மற்றும் ஓவியம் போன்றவற்றிலும் கூடிய ஈடுபாடு காட்டுவதோடு, ஒரு சுயாதீன ஊடகவியலாளராகவும் தன்னை அடையாளப்படுத்தி வளர்ச்சி கண்டிருப்பது எனக்கு மிக்க மகிழ்சியைத்தருகின்றது.

இவரது எதிர்காலம் மேலும் சிறந்து விளங்கவும், பல தடைகளைத் தாண்டி வெற்றிகளைப் பெற்று சிறப்பாக வாழவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**கலாபூஷனம் அல்ஹாஜ் எஸ். அகமது JP**
**முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**கவிஞர், ஓய்வு பெற்ற அதிபர்**
**கமு/அல்- மதீனா மகாவித்தியாலயம் நிந்தவூர்.**

# என்னுரை..

கவிதைகள் குறித்தான புரிதல்களும் அறிதல்களும் அவர் அவர் வாசிப்பு அனுபவங்கள், செயற்பாட்டுப் பரப்பு மற்றும் சூழல், போன்றவற்றைக் காரணங்களாகக் கொண்டு வேறுபடுவதை உணர முடிகிறது. அவை வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத கருத்து மையங்களாக பரப்பப்பட்டு விரிக்கப்பட்டிருக்கின்றன.

குறித்த கருத்து வெளி பிரபஞ்சத்தைப் போலவே கால நகர்வோடு ஒத்து விரிந்துகொண்டே செல்கிறது. காலத்துக்குக் காலம் பல புதிய, பழைய கருத்து மையங்கள் கண்டுபிடிப்புகளாக முன்வைக்கப்படுதலும் ஏற்கனவே கண்டறியப்பட்ட கருத்துமையங்கள் வெடித்துச் சிதறுவதும், தூசுகளாக உதிர்ந்துவிடுவதும் காணாமல் போவதுமாக அல்லது காலாவதியாவதுமாக தொடர்ந்தாலும் சில கருத்து மையங்கள் இராட்சத நட்சத்திரங்களாகவும் கிரகங்களாகவும் ஒளிர்ந்து கொண்டேதான் இருக்கின்றன.

ஆகவேதான் இவை கவிதைகள் இல்லை. இதுதான் கவிதை. இது மட்டும் தான் கவிதை என்ற வாதப் பிரதிவாதங்களை முன்வைப்பவர்களிடத்தில் நமது அறிவுக்கு வேண்டியவைகளை பெற்றுக் கொண்டு, அவர்களைக் கண்டும் காணாதவர்களாக கடந்து செல்லவும் வேண்டி ஏற்படுவதோடு நமக்கேயான சுயத்தை கட்டியெழுப்பி நமது இயங்குதளம், கவிதைச் செயற்பாட்டுத் தெரிவை மட்டுமல்லாமல் நமக்கான மொழி போன்றவற்றை

செம்மை செய்துகொள்ள அவை சிறந்த சந்தர்ப்ப பாடங்களாகவும் அமைந்து விடுவதுண்டு.

அந்தவகையில் ஆரம்பகாலங்களில் என்னால் எழுதப்பட்ட சிறு சிறு கிறுக்கல்களின் தொகுப்பாக "நஞ்சுண்ட நிலவு" உங்கள் கைகளில் இன்று இருக்கின்றது. பழசுபட்டதாய் உணர்ந்து இவற்றை தொகுதியாக்க விருப்பமில்லாத போதும் உறவுகளின் தொடச்சியான உந்துதலாலும் இதன் மூலமாக வெளிக்கிளரும் விமர்சனங்கள் மற்றும் கருத்துகள் எனது அடுத்தகட்ட முயற்சிகளுக்கு முதற்படியாக அமைந்து ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்ற நம்பிக்கையாலும் காலம் கடந்துவிட்டது என்ற மனநிலை இருந்தாலும் அகர ஆயுதத்தின் மூலமாக "நஞ்சுண்ட நிலவை" பரதியாக்கி வெளியீடு செய்கிறேன்.

இலக்கியப் பரப்பில் நிகழ்வுகளை மட்டும் அல்லது ஒன்று கூடல்களை ஒருங்கிணைக்கும் இலக்கிய செயற்பாட்டாளர் என்ற உங்கள் மனோநிலையை சற்று உடைத்து என் எழுத்துச் செயற்பாடுகள் பற்றி அறியவும் தெளிவுறவும் இப்பிரதி உங்களுக்கு உதவி செய்யும் என நம்புகிறேன்.

இந்த முயற்சி முழுமை பெற என்னோடு ஒத்துழைத்த அனைத்து தோழமைகளுக்கும் இறைவனை முன்நிறுத்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலக்கியன் முர்ஷித்
media.mursith@gmail.com

# தோரண வாயில்!.

**பேராசிரியர் டாக்டர் சேமுமு.முகமதலி,**
தலைவர், இஸ்லாமிய இலக்கியக் கழகம்,
தமிழ்நாடு,இந்தியா.

கவிதை என்பது இத்தகையது, இத்தன்மையத்து, இக் கட்டுள் அடங்குவது, இவ்வெல்லையில் ஒடுங்குவது, இப் பண்புள் சுருங்குவது என்ற அனைத்து வரையறைகளையும் தாண்டியது. கவிஞனால் உணர்ந்து அனுபவிக்கப்பட்டுச் சிந்திக்கப்பட்ட மூலாதாரப் பொருள், அவனுக்கே உரிய பாணியில் பிரசவிக்கப்படும் போது அதன் உண்மை அதனைக் கையில் எடுப்பவரின் அனுபவம், கல்வி, வயது போன்ற பரப்புகளுக்கேற்ப விரிந்து கொண்டே போகும். அதன் ஒரு சான்றாக இலக்கியன் முர்ஷித் தந்த நஞ்சுண்ட நிலவு ஒளிர்கிறது.

கல்விக் கூடங்களில் கற்றுப் பட்டங்கள் பல பெற்றவரெல்லாம் குறிப்பாக இலக்கியத் துறை மேவியவரெல்லாம் கவிஞர்களாகிவிடமுடியாது. தேர்ந்த கவிஞர்கள் கல்விச்சாலையில் கற்றதைவிட வாழ்க்கைச் சாலைகளில் கற்றவர்களாகவே காணப்படுவர். தமிழ் படித்த காரணத்தினாலேயே கவிதை எழுத முனைந்தவர்கள் பலர் புலி பிடிக்கப் போய் எலி கூடப் பிடிக்க முடியாதவர்களாக முனை முறிந்து போனதுண்டு. கவிதையைக் காதலித்ததால் கவிஞர்கள் ஆனவருமுண்டு. கவிதையே காதலித்ததால் கருவில் சிறந்த கவிஞர்கள் ஆனவருமுண்டு.. "தனிமை,

கவிதையாக மாறட்டும்; அதைவிடப் பொருத்தமான துணை வேறு யார்தான் இருக்கமுடியும்?" எனத் தனிமையைக் கவிதையாகக் காதலிக்கத் தெரிந்திருந்திருக்கும் இலக்கியன் முர்ஷித் இறையருளால் கவிதையே காதலிக்கும் கவிஞராகப் பரிணமிப்பாரென்ற நம்பிக்கையை நஞ்சுண்ட நிலவு தருகிறது.

எம் எதிரி எதிர் வீட்டான் அல்லன்; அண்டை வீட்டான் அல்லன்; எதிர் கட்சிக் காரனும் அல்லன்; உறவினனும் அல்லன்; விரோதியோ; குரோதியோ துரோகியோ அல்லன்; நம் எதிரி நம்மிலிருந்தே பிறக்கிறான்; இதைத் தெளிந்தவன் வாழ்வு செம்மையுறும். முடிவை முழுமையாகச் சொல்லாமலேயே சொல்லவந்த பொருள் அத்தனையும் ஒற்றைவரியில் ஒப்படைத்துப்போவதே நல்ல கவிதை. "நடந்து வருகிறேன்; என்னோடு நடந்து வருகிறது கறுப்பு இணையன்; முன் செல்கிறேன்; என்னை மிதித்து முன்னேறுகிறது.. பாருங்கள், எனக்குள்ளேதான் பிறக்கிறான் எனக்கான முதல் எதிரி" என்ற இலக்கியனின் கவிதை தனிமனிதனுக்குரியது மட்டுமல்ல, ஒரு குடும்பத்திற்குரியதாக, ஒரு சமூகத்திற்குரியதாக, விரிவு படுதலை உணர்கையில் இதனை வெல்ல வகையில்லையே என்ற ஏக்கப் பெருமூச்சே நிறைகிறது..

மரணமில்லாப் பெருவாழ்வையே நம் முன்னோர் விழைந்தனர்; மரணம் பாவத்தின் சம்பளம் என்பதிலிருந்து மாறுபட்டனர்; பிறந்து, இருந்து,

இறந்தவர் எண்ணற்ற கோடி; பிறந்து வாழ்ந்து இம்மை வென்றவாறு நிலைத்து இலங்குபவர் மிகவும் சிலரே; அத்தகையோர் காலமாகிவிடுவதில்லை, காலம் ஆகவே நிலைத்துவிடுகிறார்கள்; ஆகவேதான் கவியரசு கண்ணதாசன், 'எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை' என்றார் 'மரணம் ஒர் முற்றுப்புள்ளியல்ல' என்றார் கவிக்கோ அப்துல் ரகுமான். ஜனனத்திற்கு முன்னதாகவே மரணம் நிச்சயிக்கப்படுகிறது; வாழ்வு என்பது இம்மையோடு முடிவதில்லை; மண்ணறையிலும் தொடர்கிறது; மறுமையிலும் தொடர்கிறது; இவற்றையெல்லாம் உள்வாங்கி, "அதிசயப் பிறவிகளின் தெருநாடகங்கள் அற்புதவாதம் செய்கின்றன வாழ்வியல் பாசாங்குகளில்!.... வாழ்க்கை மட்டுமல்ல மரணமும் வாழ்கிறது!" என்ற இலக்கியனின் கவிதை உணர்த்தினாலும் அதனையும் மீறி "மிகப் பெரிய சமூகப எழுச்சியை ஒவ்வொரு மரணமும் உருவாக்கி வாழ்கிறது" என்ற சமூகப் பிரக்ஞையையும் தன்னுள்ளே கொண்டிலங்குவதனையும் ஆழமாக உணரமுடிகிறது என்றும் கூறலாம்.

சமூகப் பிரக்ஞை இல்லாமல் கவிதை எழுதுவது என்பது உயிரற்ற சடலத்தைக் கட்டி மகிழ்வதற்கு ஒப்பாகும். இறையைப் பாடலாம்; இயற்கையைப் பாடலாம்; அத்தகையப் பாடல்கள் காலத்தைவென்று நிலைக்கவும் செய்யலாம்; என்றாலும் தனது சமூகத்தில் காணுகின்ற அல்லல்களை, அவலங்களை, அத்துமீறல்களை, அக்கிரமங்களை, அநியாயங்களைக் கண்டு அவற்றைப் படம் பிடித்துக் காட்டி அவற்றை வென்றெடுக்கும் கவிதையை ஒரு கவிஞன் பாடவில்லை

என்றால் அந்தக் கவிஞன் உயிர்மையில்லாதவனாகிப் போகக்கூடும். முர்ஷித் இதனை நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதைப், 'பூட்டுக்கள் மூன்றுதான்', 'சோகம்', 'அரபு வசந்தம்', 'சிவப்பு ஒப்பங்கள்' போன்ற பல கவிதைகள் உணர்த்துகின்றன. "எங்கள் தலைவர்களின் கைகளில் திறப்புக்கள் விரல்களாக முளைத்திருக்கின்றன; திறக்க வேண்டிய கதவுகள் தெரியும் போதுதான் கைகளைத் தொலைத்திருக்கிறார்கள் ; தன் கண்ணைக் குத்தும் என்றஞ்சிப் பிறர் பல்லுக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதுதான் சோகம்" என்பது மிகப் பெரிய சோகமாகும்.

எத்தனையோ முகமூடிகளுக்குள் மாறி மாறி மூழ்கிக் கிடக்கிறான் மனிதன்; ஆளுக்கேற்ப, நாளுக்கேற்ப, நேரத்திற்கேற்ப, சந்தர்பத்திற்கேற்ப எத்தனை எத்தனை முகங்கள்; இவற்றுக்கிடையே தனது உண்மை முகத்தையே தொலைத்துவிட்டுத் திண்டாடுகிறவனே சாதாரண மனிதன்; தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிவான். கற்று வருவது அறிவு; தன்னைத் தோண்டத் தோண்ட வருவது ஞானம். கவிஞன் ஆரம்பத்தில் காதலனாக இருக்கலாம்; இயற்கைவாதியாக, மனித நேயவாதியாக, சமூகவாதியாக, சீர்திருத்தவாதியாக இவ்வாறெல்லாம் பல நிலைகளில் கவிஞன் பரிணாமம் பெறலாம்; ஆனாலும் ஒரு ஞானவானாகப் பௌர்ணமிக்கிற போதுதான் ஒரு கவிஞன் முழுமை பெருகிறான் "நான் பார்க்கும் நிலைக்கண்ணாடி கூட காட்டிக் கொண்டேதான் இருக்கிறது தினம் ஒரு முகம்" என்று

சொல்கிற முர்ஷித் ஞானப்பாட்டையில் பயணம் தொடர்ந்து செல்லத் தகுதியானவர் என்பதை உணர்த்துகின்றது. "ஓர் அகழ்வாராய'ச்சி செய்யத் தயாராகிறேன், அதில் என்னைக் காண்பேனா என்றுதான் தெரியவில்லை" என்கிறார் முர்ஷித் " அன்பு இளவலே, தொடரட்டும் உனது ஆய்வு; இறையருளால் உனை நீ அடையாளம் காண்பாய்!" காரணம் "எனது பாடல்களுக்குள் பசியின் ராகம் உயிர்த்துக் கொண்டிருக்கிறது" என நீயே பாடியிருக்கிறாயே!.." என்று நாம் துணிந்து கூறலாம்.

மனதின் ஆழத்தில் பதிந்துவிட்ட நிகழ்ச்சிகளின் முத்திரைகளிலிருந்தே கவிதையின் மூலாதாரப் பொருள் உருவாகின்றது. எவ்வளவு ஆழமாக அழுத்தமாக அவை பதிகின்ற அளவே கவிதையின் சிறப்பை அளக்கின்றது. நிகழ்ச்சிகளின் முத்திரைகள் உணர்வுகளால் உடைபட உருவாகிற கவிதை கவிஞனின் கலை நேர்த்தியில் சாகாவரம் பெற்றுவிடுகிறது. "மரங்கள், செடி கொடிகள், கால்நடைகள், குளம் குட்டைகள், குடிசைகள், கோயில்கள், பள்ளிகள் அத்தனையும் நகர்ந்து கொண்டேயிருக்கின்றன; ஆனால் நான் மட்டும் இருந்த இடத்திலேயே இருக்கிறேன்" என்ற காட்சிப் பிழையும், பொம்மை வேடம் தரித்த தனிமையும், அடுத்த நிமிடமும் நம்மை அவ்வகையில் சிந்திக்க வைக்கின்றன.

உறவில், நட்பில் சிக்கல் வருவதற்கான மூல காரணம் தன்னை ஒருவன் மற்றொருவர் மீது

திணிப்பதாலேயே ஆகும். தன் விருப்பப்படியே, தான் சொல்லுகிற படியே உறவும் நட்பும் இருக்கவேண்டுமென்ற ஆக்கிரமிப்பே உறவில், நட்பில் விரிசலை உருவாக்கிறது. தான் விழைகிறபடியே துணையும் மக்களும் இருக்கவேண்டுமென்ற சர்வாதிகாரமே வாழ்க்கையைச் சிக்கல்களால் சூழச் செய்கிறது. ஐந்து விரல்களும் ஒரே அளவில் இருந்தால் உணவை அள்ளி உண்ண இயலுமா? அவரவரது இயல்புகளுடனேயே ஏற்று வாழும் கண்ணியப் பண்பைப் பெறாததாலேயே இந்த வாழ்க்கை ஒரு மாயமாகத் தெரிகிறது. " நீ நீயாகவே இரு; நான் நானாகவே இருக்கிறேன்; நீ நானாகவும், நான் நீயாகவும் மாற நினைக்கும் போதுதான் மாயமாகிறது வாழ்க்கை" என்ற கவிஞரின் வரிகள் யதார்த்தமானவை என்றாலும் எத்துணைப் பொருள் வாய்ந்தவை என்பதும் குறிப்பிடுவதற்குரியதாகும்.

"மழைத் துளிகளை ஒவ்வொன்றாய் பொறுக்கி எடுத்து எனது சட்டைப் பைக்குள் சேகரித்து வைத்திருந்தேன்; இன்று ஓர் நதி பிரவாகமெடுத்திருக்கிறது" என்கிறார் முர்ஷித். பல்வேறு இதழ்களில் வெளியான அவரது கவிதைப்பூக்கள் தொகுக்கப்பெற்று ஒரு மாலைப் பந்தாகி 'நஞ்சுண்ட நிலவாக' உலா வந்திருக்கிறது. பாற்கடலைக் கடைந்த போது வந்த நஞ்சை உண்டு சிவன் அமிர்தத்தையே வழங்கியதாக புராணம் கூறும். நஞ்சுண்ட நிலவானாலும் இந்த நூல் அமிர்தத்தையே வழங்கியிருக்கிறதெனத் துணிந்து கூறலாம்.

சரியான திசையில், சரியான பாட்டையில், செரியான இலக்கு நோக்கிப் பயணம் நடாத்திக் கொண்டிருக்கும் இலக்கியன் முர்ஷித் கவிதா மண்டலத்தில் தனி நிலவாக ஒளிர இறைஞ்சி வாழ்த்துகிறோம்.

வாழ்க.. வாழ்க..

**சேமுமு.முகம்மதலி**
**27/53 நரசிம் புரம், மயிலாப்பூர்,**
**சென்னை 60004, தமிழ்நாடு**

# மனதின் மொழியாய் மலர்ந்த கவிதைகள்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

இலக்கியன் முர்ஷித் எழுத்தாலும், நடத்தையாலும், பழகும் விதத்தாலும் இதயங்களைக் கவர்ந்திருப்பவர். "அகர ஆயுதம்" இலக்கிய அமைப்பின் தலைமைச் செயற்பாட்டாளராக இருந்து இலக்கிய அமர்வுகளையும் உரையாடல் பொது வெளிகளையும் ஒழுங்கு செய்வதில் முன்னின்றவர்.

முகநூல் வழியாக மாத்திரமே செயற்பட்டு இலங்கை, இந்தியா மற்றும் புலம்பெயர் நாடுகளினதும் மூத்த-இளைய தலைமுறை படைப்பாளிகளோடு பல்கலைக்கழக பேராசிரியர்களையும் இணைத்துக் கொண்டு அகர ஆயுதத்தின் மூலம் இவர் நடாத்திய அமர்வுகள் மறக்க முடியாதவை் அவை இலக்கியப் பரப்பில் புதிய தாக்கத்தை, திருப்பத்தை, ஊட்டத்தை வழங்கியவை.

இலக்கியன் முர்ஷித் வித்தியாசமான படைப்பாளி. உள்மனத் தேடல் இவரின் படைப்புகளில் துலங்கும். மனதின் மொழியாக அமைந்து வருபவை முர்ஷித்தின் கவிதைகள். சிறிய சொற்களின் அழகிய கோவையாக- உணர்வுகளின் ஊர்வலமாக- சித்திரச் சிறைப் பிடிப்பாக இவரின் கவிதைகள் அமைந்து வரும்.

முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஒருவடிவத்தில் கவிதை எழுதுபவரல்ல முர்ஷித். அவர் உணர்ந்து

கொண்டதை - அனுபவத்தை - சொல்ல வேண்டுமென்று விரும்புவதை சொல்ல முற்படுகின்ற போது தமக்கான வடிவங்களைப் பெற்றுக் கொண்டு இவரின் கவிதைகள் பிறக்கின்றன. ஆயினும்,அவை ஒரு மெல்லிய ஒத்திசைப்பை பெற்றனவாக அமைந்து கவிதையின் ஈர்ப்பு சக்தியை அதிகரிக்கச்செய்கின்றன.

முற்றிலும் பொருள் புலப்படுமாறு எழுதுவதே கவிதை என்று நம்புபவரல்ல முர்ஷித் என்பதை அவரின் கவிதைகள் உணர்த்தும். பன்முகத் தன்மையான இவரின் கவிதைகளை வாசிக்கும் போது பொருள் பிடிபடாத போதும் ஏதோ ஒரு வலியை, சோகத்தை அல்லது மகிழ்வினை உணர்கின்ற ஒருநிலைக்கு உட்படுத்தும் தன்மை உடையனவாய் அமைந்திருக்கும்

நவீன கவிதை மொழியும், புதிய உத்திகளும், ஆற்றலும் நிறைந்திருக்கும் முர்ஷித் அவர்களின் கவிதை இலக்கியச் செயற்பாடு இன்னும் விரிவடைய வாழ்த்துகின்றேன்.

**அன்புடன்,**
**பாலமுனை பாறூக்**

# மூடு மந்திரம் அல்லாத கவிதைக்காரன் முர்ஷித்..

கலாபூஷணம் ஆசுகவி அன்புடீன்

கல்முனை கலை இலக்கிய எழுச்சியில் 2010க்குப் பிறகு மேலுமொரு முகிழ்ப்பை தொடக்கி வைத்த பெருமை 'அகர ஆயுதம்' இலக்கிய குழுவிற்கு இருக்கிறது. ஒரு புதிய இளைஞர்படை அகர ஆயுதம் மூலம் அறிமுகமாயினர். இலக்கிய முதுசங்களை தேடுவதிலும், புதிய அரும்புகளை உற்சாகப்படுத்துவதிலும் இவ்வாயுத படை ஆர்வம் காட்டிற்று. அந்த குழுவின் பிரதம செயற்பாட்டாளராக விளங்கியவர் இலக்கியன் முர்சஷித்.

அகர ஆயுதம் ஆரம்பித்த காலம் தொட்டு என்னோடு தொடர்புபட்டிருந்தார் இலக்கியன்.. பகலில் சூரியனைப்போலவும் இரவில் சந்திரனைப்போலவும் மிகவும் அர்ப்பணிப்புடன் அகர ஆயுதம் அமைப்பின் வளர்ச்சிக்கு அவர் உழைத்ததை அவதானித்திருக்கிறேன்.

கவிஞர் முர்ஷித்திடம் ஆமையின் அடக்கம் இருந்தது. இருந்தாலும், முயலின் வேகமான ஓட்டத்தை அவரது செயற்பாடுகளில் காணமுடிந்தது. அகர ஆயுதக்காரர்களது போராட்டம் வீணாகவில்லை. அந்தப் போராட்டத்தின் ஜெயமாகத்தான் பிரசவமாகியிருக்கிறது 'நஞ்சுண்ட நிலவு' கவிதை நூல்.

சூரியன் நஞ்சுண்டால் ஏற்றுக்கொள்ளலாம், பொறுத்துக் கொள்ளலாம். மாறாக நிலவு நஞ்சுண்டால் முழு உலகமுமல்லவா விஷம் கலந்து போய்விடும். நிலவு நஞ்சுண்டதால்தான் இந்த உலகம் இப்படி விஷம் நிறைந்ததாய் காட்சியளிக்கின்றதோ.

'நஞ்சுண்ட நிலவு' என்ற தலைப்பைப ரர்த்ததும் நான் 1986ஆம் ஆண்டு எழுதிய 'நிலவு சுடுகிறது" என்ற கவிதை எனது ஞாபகத்திற்கு வந்தது. அது இலங்கையின் போராட்டக் காலம். போராட்டத்தின் பொலிவுகளை அக்கவிதை பொழிந்தது. இன்றைய காலம் நிலவு நஞ்சுண்டதாகத்தான் தெரிகிறது. அதிலொரு விஷச்சந்திப்பாக இருக்கிறது இந்த நூலின் முதற்கவிதை. "நமக்கான எதிரி நமக்குள்ளேதான் இருக்கிறான். நமது நிழலே நமக்கு எதிரியாகிவிடுகிறது" எனும் விஷ(ய)த்தை விளங்கப்படுத்துகிறது அக்கவிதை. இப்படி பல்வேறு கவிதைகள், எல்லாமே நிலவு நஞ்சுண்ட விஷயங்களை விளங்கப்படுத்துகின்ற கவிதைகள்தான்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவிதை எழுது கவிஞனின் வேலையல்ல. எல்லோருக்குமாகத்தான் ஒரு கவிதையை எழுதுவான் கவிஞன். கவிஞன் வாசகனைத்தேடி கீழிறங்குவதில்லை. வாசகன்தான் கவிஞனை தேடி மேலே ஏறிவரவேண்டும். முர்ஷித் பாடும் கவிதைப் பொருள் மூடுமந்திரமல்ல, அதன் முடுச்சுக்களை அவிழ்த்து விளங்கிக் கொள்ள வாசகரும் முயற்சி செய்ய வேண்டும்.

சாதாரண வாசகனையும் இலக்கிய வாசகனாக மாற்றும் முயற்சியில் இயங்குகிறார் இலக்கியன். முர்ஷித் நம்பிக்கை தரக்கூடிய கவிதா சிந்தனைக்காரன். அவர் இன்னும் எழுதுவார், எழுதவேண்டும். வாழும் கவிதை, அவர் எழுத்தில் லாழ வாழ்த்துவோம்.

-எல்லோரும் வாழ்வோம் இனிது-

**அன்புடன்**
**கலாபூஷணம் ஆசுகவி அன்புடீன்**

## மரணமும் வாழ்கிறது

அதிசய பிறவிகளின்
தெரு நாடகங்கள்
அற்புதவாதம் செய்கின்றன
வாழ்வியல் பாசாங்குகளில்

கழிப்பறை பிரவேசங்களில்
பிராணவாயுகளை
கற்பழிப்புச் செய்கின்றன
தலைமுறைகளின் தண்டவாளங்கள்

தீயணைக்க
பிரேரணை வைக்கிறது
மண்ணெண்ணை

ஓ..
பிரபஞ்சமே
வாழ்க்கை மட்டுமல்ல
மரணமும் வாழ்வதாய்
உணர்கிறேன்

## எதிரி

நடந்து வருகிறேன்
என்னோடு
நடந்து வருகிறது
கறுப்பு இணையன்
முன் செல்கிறேன்
என்னை மிதித்து
முன்னேறுகிறது
பாருங்கள்.
எனக்குள்ளே தான்
பிறக்கிறான்
எனக்கான எதிரி

## ஓவியமாக இருக்கலாம்

ஒரு
ஓவியனின் வீட்டில்
மஞ்சள்,
நீலம்,
சிவப்பு
வண்ணங்களில்
காக்கைகள்
வளர்க்கப்படுகின்றன
மஞ்சள்
நீலத்தைக் காதலிக்கின்றது
நீலம்
சிவப்பைக் காதலிக்கின்றது
சிவப்பு
மஞ்சளைக் காதலிக்கின்றது
இந்த
கலப்புக் காதலின் விளைவு சிலருக்கு
ஒரு ஓவியமாக இருக்கலாம்
அல்லது
அசிங்கமான அலங்கோலமாக
இருக்கலாம்

## பறவைகள் அடைக்கலம் பெறலாம்

கொழுத்து வளர்ந்து கொடி கட்டாமல்
பறந்து கொண்டிருக்கிறது-ஓர்
ஓயாத ஒட்டுண்ணியின் ராஜ்ஜியம்
எனது விரல்களின் நாட்டியத்தில்,
தினமும் அரங்கேறிக் கொண்டிருக்கிறது
ஒட்டுண்ணியின் பட்டறைப் புகைச்சல்
எனது துளிர்த்தல், பூத்தல், காய்த்தல் எல்லாம்
சிறைப்பட்டுக்கிடக்கின்றன
ஒட்டுண்ணியின் மறுத்தலில்

என்னில் நிழல் தேடி
ஒதுங்குவோருக்கு நான்
என்ன செய்வேன்?

எனக்கான தென்றல்
என்னை கட்டித்தழுவும் போதும்
எனக்கான மழை
என்னை தூய்மை செய்யும் போதும்
இந்த ஒட்டுண்ணியின்
இறுக்கம் இருக்கப்போவதில்லை

எனது புதுத்தளிர்கள் பலநூறு
கிளைகள் செய்யும்போது
என்னில் ஆயிரம் ஆயிரம்
பறவைகள் அடைக்கலம் பெறலாம்
ஊருக்கே நிழலை, இறைவன்
என்னுள் சமைத்துக் கொண்டேதான்
இருக்கிறான்
சற்று தாமதிக்கவேண்டியிருக்கிறது!..

## புரட்டுவதற்குள்

நான்
பிரதியை .
புரட்டுகிறேன்
அது
என்னை
புரட்டுகிறது

நான்
பிரதியின்
கடைசிப்பக்கம் வரை
புரட்டுவதற்குள்

பிரதியோ எனது
இறந்த காலம்,
நிகழ் காலம்,
எதிர் காலம்
அனைத்தையும்
புரட்டி விடுகிறது

நான் வாசிக்கத்தான்
புரட்டினேன்

## உங்கள் கற்பனை..

இனந் தெரியாத
தனித்தீவொன்றில்
அல்லது
கண்டுபிடிக்கப்படாத
தூரக்கிரகமொன்றில்
அல்லது
மறைக்கப்பட்ட
மந்திரவுலகமொன்றில்
தனியாக..
கவிதை எழுதிக்கொண்டிருக்கிறேன்
நான் தூங்கிக்கொண்டிருப்பதாக
நீங்கள் கற்பனை செய்து
கொண்டிருக்கின்றீர்கள்..

## பறத்தல்..

ஆதியில் நிகழ்த்தப்பட்ட சம்பவம் ஒன்றில்
என்னை பயணிக்கச் செய்கிறேன்
நெரிசல் மிகுந்த நினைவின் அலைகள்
சிறு குருவிகளின் வடிவில்
கூடுகளில் இருந்து
கூட்டம் கூட்டமாக பறத்தலை
பரீட்சிக்க ஆரம்பிக்கின்றன

## சாவிகளுக்கான தேடல்கள்

அந்தரங்கச் சாம்ராஜ்யங்களில்
கதவுகள் மூடப்பட்டே இருக்கின்றன
அவை
வெட்கமாகவும் இருக்கலாம்
பயமாகவும் இருக்கலாம்
அசட்டுத் துணிவாகவும் இருக்கலாம்
அவற்றின்
சாவிகளுக்கான தேடல்கள்
தொடர்ந்து கொண்டே இருக்கின்றன

## தின்றுவிடல் அல்லது குடித்துவிடல

இன்றைகளில்
நாளைகளை
சந்தித்தல் முடிகின்றன
நாளைகளில்
இன்றைகளை
சந்தித்தல் சாத்தியமில்லை
ஒரு
இன்றைக்காய்
ஆயிரம் நாளைகளை
தின்று விடலாம்
ஒரு
நாளைக்காய்
ஆயிரம் இன்றைகளை
குடித்துவிடல் முட்டாள் தனமாகிறது
சேமிப்பை தவிர

## இரவின் மீது..

என் இரவின் பயணங்கள்
இருள் அடர்ந்த தனிமைகளை
கவிதைகளாக மௌனிக்கச்
செய்யும்போது
ஆன்மா - இருதயத்துடிப்பு - மூச்சிக்
காற்று
மூன்றும் ஒரு புள்ளியிலிருந்து
பிரபஞ்சத்தை
புசிக்கத் தொடங்கிவிடுகின்றன..

## நானும் மனிதனாகயிருக்கிறேன்

என்னையே
நம்பமுடியவில்லை,
நானும்
மனிதனாகயிருக்கிறேன்
இனந்தெரியாத
அகோரப்பசியில் அலையும்
இந்த
சமூகப்பிராணிகளுக்குள்
ஏதோ ஒன்று
என்னையும் மனிதனாக
பூசி மினுக்கியிருக்கின்றது

## பூட்டுக்கள் மூன்றுதான்

காப்புச்சுவர்கள்
புசித்துக் கொண்டிருக்கின்றன
காத்தல் என்ற சொல்லை
மூப்பர்களின்
முப்பரிமாண திட்டமிடல்
பழங்காலச் சாக்குகளைத்
தேடிச்செல்கின்றன
தூதுவராலயங்கள் தோறும்
தமிழன்
இஸ்லாமியன்
சிங்களவன் எனும்
பூட்டுக்கள் மூன்றுதான்
ஆனால்
திறக்கும் திறப்புக்கள்
ஒன்றாகவே
தொலைக்கப்பட்டிருக்கின்றன

## சு...தந்திரம்

அழைக்கிறேன்
வரிகள் மட்டும் வருகின்றன
குதிரையைக் காணவில்லை
அந்தத் தாளின்
நான்காவது வரியில்
குதிரையை கட்டிவைத்திருக்கிறேன்
கட்ட மறந்த
வரிகளுக்கு மட்டும்
இறக்கை முளைத்திருக்கின்றது

## அரட்டி விடாதீர்கள

எனது மேசையில்
சிறு குவளையில்
என்னை ஊற்றி
வைத்திருக்கிறேன்
விரும்பியவர்கள் அருந்தலாம்
அதே மேசையில்
காகிதங்களில்
எனது உணர்வுகள்
தூங்குகின்றன!..
சூசூ!..
யாரும் அரட்டி விடாதீர்கள்
உங்களது அனுமதி
இல்லாமலே
உங்கள் விழிகள்
நனைந்து விடுக்கூடும்..

## பொம்மை வேடந்தரித்த தனிமை

தந்தையை இழந்த
சிறுவன்
தனியாகவே வாழ்கிறான்
அவனது தனிமை
பொம்மை வேடம்
தரித்திருக்கிறது
அவனது பொம்மை
கதைகள் சொல்லி
தூக்கம் தருகிறது
நிலாக்காட்டி சோறூட்டுகிறது
குளிப்பாட்டி ஆடையணிவிக்கிறது
பூங்காக்களுக்கும்
கடற்கரைகளுக்கும்
கடைத்தெருக்களுக்கும்
அழைத்துச் செல்கிறது
சற்று நிறுத்துங்கள்
எதைத்தேடுகின்றீர்கள்
சிறுவனின் தாயையா???...
பைத்தியக்கார குழந்தையுடன்
வாழ பிடிக்கவில்லையாம்
அவளுக்கு

## இந்த பிரதி

பிரதியொன்றின்
நான்காவது பக்கம்
பூனைகள் எழுத்துக்களை
அடைகாக்கின்றன
எட்டாவது பக்கத்தில்
கோழிகள் குறியீடுகளை
வேட்டையாடுகின்றன
முன் அட்டையில்
நாய்கள் தூங்குகின்றன
கடைசி அட்டை
வெறுமையான நிறத்தில்
இருக்கின்றது
இந்த பிரதி
எதிர்வரும் தினமொன்றில்
திருட்டுப் போயிருக்கின்றது

## கண்டுபிடிக்கப்படவில்லை

ஒரு துளியில்
ஒரு பிரபஞ்சம்
பார்க்கிறேன்
அது
மழைத் துளியா
பனித் துளியா
குருதித் துளியா
அக்கினித் துளியா
உயிர்த் துளியா
ஆய்வுகள் தொடர்கின்றன -ஆனால்
ஆய்வுகூடம் தான்
இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை

## அறியாமல்

இரவின் அடர்ந்த இருள்
தனிமயின் சாய்வு நாற்காலியில்
சாய்ந்தபடியே நட்சத்திரங்களை
எண்ணிக் கொண்டிருக்கிறது
மறைக்கப்பட்ட பிரபஞ்ச வெளியில்
காய்ந்து கொண்டிருந்த நிலவு
திருட்டுப்போய்க் கொண்டிருப்பதை
அறியாமல்

## அடுத்த நிமிடம்??

காலத்தை
உருட்டித் திரிகிறேன்
தெருக்களில்
நானும்
பிறந்திருக்கிறேன்
நானும்
வளர்ந்திருக்கிறேன்
நானும்
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்
இந்த நிமிடம்
தெருக்களில்
உருட்டப்படுகிறது
இன்று
வாழ்கிறேன்
காலத்தை உருட்டுபவனாக
எனக்கான
அடுத்த நிமிடம்??

## பேசாதீர்கள்..

ஹிட்லரின்
படுக்கையறையில்
கொழுவப் பட்டிருக்கும்
ஓவியங்களோடு
பேசுகிறது
மோனாலிசாவின் புன்னகை
சூ..
பக்கத்து அறையில்
முசோலினி
விழித்திருக்கின்றான்
பேசாதீர்கள்

## மாயமாகிறது வாழ்க்கை

யாரும்
யாரைவிடவும்
குறைந்தவரோ
தாழ்ந்தவரோ
இல்லை
யாரும்
யாரைவிடவும்
நிறைந்தவரோ
உயர்ந்தவரோ
இல்லை
நீ
நீயாகவே இரு
நான்
நானாகவே
இருக்கிறேன்
நீ
நானாகவும்
நான்
நீயாகவும் மாற
நினைக்கும் போதுதான்
மாயமாகிறது வாழ்க்கை

## போர்க்கால கவிதை

ஒரு கதை
எழுதிக்கொண்டிருந்தேன்
அதற்குள்
"எண்ணெய்" எனும் சொல்லை
எழுதியபோது
ஒவ்வொரு
வாக்கியங்களையும்
கழுகுகள்
வட்டமிட்டுக் கொண்டிருந்தன
அப்போது
கதை மாந்தர்கள்
கவிதைகளுக்குள்
புலம் பெயர்ந்து கொண்டிருந்தனர்
அக்கவிதைகள்
போர்க்கால கவிதைகளாகவும்
இருக்கலாம்..

## முட்டரிசிகளாக...

மலர்ந்து நிமிர்ந்து கிடக்கிறது
பந்தியில்
காக்கை குந்திய
வாழையிலை

இரத்த மணம் மாறி
கறியாய் கோப்பையில்
கொதித்து வெந்து இருக்கிறது
பலியுண்ட கடா

அடுப்பில் வாட்டிவதக்கி
கூட்டாக பரிமாற
தயாராகிறது
சூத்தை குத்தாப் பச்சை
மரக்கறிகள்

கரைத்து கணக்காய்
சேர்க்கப்பட்டிருக்கிறது
இவையனைத்திலும்
உப்புடன் க(த)ண்ணீர்

ஊறல் அரிசிகள் மட்டும்
ஏன் இன்னும்
அடம் பிடிக்கிறதோ தெரியவில்லை.
வேகுவதற்கு?
மூடர்களைப் போல
முட்டரிசிகளாக
அவை எதற்கு?..

## காட்சிப் பிழை

மரங்கள்
செடி கொடிகள்
கால் நடைகள்
குளம் குட்டைகள்
குடிசைகள்
மாட மாளிகைகள்
கோவில்கள்
பள்ளிகள்
அத்தனையும்
நகர்ந்து கொண்டே இருக்கின்றன
ஆனால் நான் மட்டும்
இருந்த இடத்திலேயே
இருக்கிறேன்

## வெள்ளையாடை கறுப்பு அறை!..

ஒரு குவளையில் புன்னகை
அருந்திக் கொண்டிருக்கிறேன்
அந்தி மாலை என் வாசலுக்கு
வந்து கொண்டிருக்கிறது
சந்திரனுக்கும் சூரியனுக்கும்
திருமணப் பேச்சுவார்த்தை
சந்திரன் வந்து கொண்டிருக்கிறாள்
மாப்பிள்ளை பார்ப்பதற்கு
சூரியனோ இரவைப் போர்த்திக்கொண்டு
சூனிய பயத்தில் படுத்திருக்கிறது
வசியக்காரி இவள்
வளைத்துப் போட்டு விடுவாள்
ஓர் விழிப் பார்வையால்
நாளையும் வருவாள்
நாளை மறுநாளும் வருவாள்
ஐயோ பாவம்!..
வரப்போவதில்லை இந்த மாப்பிள்ளை
கன்னி கழியாத வசியக்காரி- இவள்
கனவுகளினாலான வயசுக்காரி
வெள்ளையாடை!..கறுப்பு அறை!..
இதுவே இவளின் தொடர் கதை!..

## அதிசய பறவை

நேற்று முளைத்த காளான்கள் சில
குத்தகைக்கு கேட்கின்றன
எனது பிரபஞ்சத்தை

ஈசல்களின் ஆக்கிரமிப்பில் பலயுகங்களாக
அடிமைப்பட்டு கிடக்கின்றது
எனது உலகம்

குருட்டு வௌவால்கள் சில
விலைபேசி கொண்டிருக்கின்றன
எனது சூரியனை

காடயர்களால்
புகைந்து கொண்டிருக்கின்றன
எங்களது புன்னகைகள்

என்னை விடு
முளைக்க போகின்றேன்
கவசப்பறவையாக

என்னை விடு
முளைக்கப் போகின்றேன்

## அரபு வசந்தம்

### 01-கவசப் பறவைகளே

துப்பாக்கி முனைகளில்
மலரட்டும்
வெள்ளை ரோஜக்கள்

பீரங்கித் துளைகளில்
கூடுகட்டட்டும்
வெள்ளைப் புறாக்கள்

ஓ...
இரும்புப் பறவைகளே...
குண்டுகள் பொழிந்தது
போதும்
மேகங்கள்
அழுகின்றது சற்றே
விலகி நில்லுங்கள்

ஓ...
நகரும் நகரங்களே...
நரகம் விதைத்தது
போதும்
கடலாவது தூய்மை
அடையட்டும்
துறைமுகங்களுக்கு
செல்லுங்கள்..

## 02-வரம் கொடு

ஓ..
(வல்)அரசுகளே..
உங்களது சிப்பாய்களுக்கு
பதவியுயர்வு கொடுங்கள்
அன்புத் தூதுவர்களாக

ஓ..
(வல்)அரசுகளே..
உங்களது யுத்தகளங்களை
மேய்ச்சல் வெளியாக்குங்கள்
எத்தனை காலம்தான்
கழுகுகள் மட்டும் கொழுப்பது?
பசுக்களும் பசியாறட்டுமே

இறைவா
இரத்தவாடைகளை
பூந்தென்றலால் சலவை
செய்வாயாக

இறைவா
எத்தனை நாட்களுக்குத்தான்
விழிகள் மட்டும் வியர்ப்பது?
உலகம் செழிக்க
உடல்களும் வியர்க்க
வரம் கொடு!..

## சிவப்பு ஒப்பங்கள்

கனவுள் மேய்ந்த
ஆயிரம் இரவுகள்
கதவுகள் உடைந்த
ஓட்டை முகாம்கள்

சொந்தமண் தொலைத்து
தெருக்களில் நாங்கள்..
முகவரிதேடும் வாழ்க்கை
'அகதி' என்ற பெயரில்...

இவை எல்லாம்
இருக்கப்போவதில்லை...
துப்பாக்கி ரவைகளுக்கும்,
பல்குழல் செல்களுக்கும்
'மனித நேயம்'
தெரிந்திருந்தால்
அந்த
கறுப்பு நினைவுகளில்
சிவப்பு ஒப்பங்கள்-மனித
வெள்ளை மனங்கள்
கொள்ளை போனதால்

## அன்றைய பயணம்

எனது பயணத்தின்
நிமிடங்கள் தற்கொலை
செய்து கொண்டிருந்தன
தூரங்கள்
தூக்கு மேடையாய்
உயிர்கள் குடித்துக் கொண்டிருந்தன
இருக்கைகள்
சதைகளாலும், எலும்புகளாலும்
நிரப்பப்பட்டுக் கொண்டிருந்தன

ஆங்காங்கே
மனித வாடை ஊசலாடியது
ஓர் மூதாட்டி
நின்றபடி
பயணிக்கும் போது
ஓர் இளைஞன்
எழுந்து
இருக்கை தருகிறான்
மூதாட்டிக்கு
தூக்கு மேடை
தூளானது
தற்கொலை குறிப்புக்கள்
சிவப்பு ரோஜாக்கள்
மலர்ந்தன
மனிதம்
மணக்கிறது
தெருக்கள் முழுதும்
மகிழ்ச்சி
நீள்கின்றது

## ஐந்து விழுதுகள்..

1)
அத்வைதப் பெருவெளியில்
மலர்கள் என்னோடு
பேசிக் கொண்டிருக்கின்றன
நான் அதன் முட்களோடு
பேசிக் கொண்டிருக்கிறேன்
இன்னும் விடியவில்லை..

2)
எனது அறைக்குள்
ஒரு வானம் செய்திருக்கிறேன்!..
அதன் சுவர்களில்
பல்லிகள் கிரகங்கள்
செய்கின்றன

3)
ஏதோ ஒரு தெருப்பாடகனின்
பாடலைப் போலவே
தினந்தோறும்
இருளில் கரைகின்றன
உனக்கான காத்திருப்புகள்
4)
சுவர்களற்ற அறைக்குள்
வைக்கப் பட்டிருக்கிறேன்
கதவுகளற்ற பூட்டுகள்
சிறைப் பிடித்திருக்கின்றன
நானைக் கடந்த ஆன்மாவை

5)
கதவு மூலையில்
அழுதுகொண்டிருக்கிறது எனது
கறுப்புக்குடை
மழையைப் பிரிந்ததால்
இருக்கலாம் இந்த அழுகை
எனது தூரலே..

## விடியும் நேரம்

சில வானங்களை எனக்குள்
வரைந்திருந்தேன்
அவை இரவுகளால்
போர்த்தப் பட்டிருந்தது
கதைப்படி
அதுவொரு அமாவாசை
நிலவையும்
நட்சத்திரங்களையும்
புனையும் வேலை
எனக்கு தரப்பட்டிருந்தது
ஆனால் சூரியன்
ஒன்றை புனைந்து விட்டேன்
இப்போது சூரியனிலிருந்து
மேலே சொல்லப்பட்ட
நிலவையும் நட்சத்திரங்களையும்
உருவாக்க
முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்
கதைப்படி இப்போது
விடியும் நேரம்

## எனது மூன்று பறவை

1
எனது வானத்தில்
பறந்து கொண்டிருக்கும்
வெள்ளைப் புறாக்களுக்கு
கறுப்பு நிழல்கள்தான்
கவசம்

2
காக்கைக் கூட்டில்
குயிலின் ராஜாங்கம்
அனாதையில்லம்
தேடவேண்டியதில்லை
குயில்

3
இந்த பிரபஞ்சம்
எனக்கான கடல்
அந்த இயற்கை
எனக்கான படகு
எனது தேடல்
எனக்கான துடிப்பு
நான் பிரபஞ்சப்
பறவை

## கனவு பற்றிய வாக்குமூலம்

மாயங்கள் கலந்த
எனது கனவுகளுக்குள்
நீர்த் திவலைகளாக
உதிரக் காத்திருக்கும்
இலை ஒன்றை
வரைந்து வைத்திருக்கிறேன்
அதன் வண்ணங்களில்
ஆயிரம் ஆயிரம் புன்னகைகள்
மலர்களாக மலர்ந்திருந்ததாக
எனது முன்னோர்கள் நம்பியிருந்தனர்.
அந்த வரலாற்றுக்கு முந்தைய நிகழ்வை
முடிந்துபோன போர் ஒன்று
முடித்து வைத்திருந்தது

## தனிமையும் கவிதையும

நரம்புகள் அறுந்த
பாடல்களால்
அலங்கரிக்கப் படுகின்றன
எனக்கான கீதங்கள்
மூடிய அறைகளுக்குள்
மூடாமல் குளிர் காய்கின்றது
ஒரு நிமிட பயணத்தின்
ஒருவித சங்கீதம்.
தனிமை
கவிதையாக மாறட்டும்
அதைவிட பொருத்தமான துணை
வேறு யார்தான் இருக்கமுடியும்?

## !..?..

நான் பார்க்கும்
நிலைக்கண்ணாடி கூட
காட்டிக் கொண்டே தான்
இருக்கிறது
தினம் ஒரு முகம்
சில ஆச்சரியக் குறிகளை
தட்டி வளைத்து
கேள்விக் குறிகளாக்கியிருக்கிறேன்
என்னை
கொல்லன் என்று
நினைத்து விடாதீர்கள்
ரூமியின்
புல்லாங்குழல் இசையிலிருந்து
வழிந்து வீழ்கிறது
தாகூரின் வீணை நரம்புகளில்
ஏதோ ஒன்று

## ஓர் இரவுச் சம்பவம்

தூங்க மறுக்கும்
பொழுதுகளுக்குள்
உறைய மறுக்கிறது
எனது தனிமை

நான்
தூங்குவதற்கு
முன்பே
தூங்கி விடுகிறது
எனது படுக்கையில்
இரவு

வலிகளால்
எனது
கனவை புனைகிறேன்
அதில்
கண்ணீர்த் துளிகள்
நட்சத்திரங்களாகின்றன

## தெரியவில்லை

புதிர்களால்
புனைந்திருக்கிறேன்
ஒரு கவிதை
இது அதித கற்பனைகளுக்கு
அப்பால்
யதார்த்தக் காட்டில்
தீ மூட்டிக் கொண்டிருக்கிறது
என்னுள்
ஒரு அகழ்வாராய்ச்சி
செய்யத் தயாராகிறேன்
அதில்
என்னை காண்பேனா
என்றுதான்
தெரியவில்லை

## மரணம் பற்றிய பாடல்

நான்
குனிந்து நடந்துவந்த
சாலைகளில்
என்னை
குடித்து நிமிர்ந்து
வருகிறது
ஒரு
முகாரி ராகம்
நான்
நிமிர்கிறேன்
என்னை துணைக்கு
அழைக்கின்றன
கல்லறைகள்

## சங்கீதங்கள் இரண்டு...

1.
அந்த கீதங்களின்
எல்லைகளில்
புல்லாங்குழல்களின் துளைகள்
ஒழிந்து கொள்கின்றன
மிருதங்கங்களில்
மிருகங்களின்
கண்ணீர்த் துளிகள்
உறையும் போதெல்லாம்

2.
எனது பாடல்களுக்குள்
பசியின் ராகம்
உயிர்த்துக் கொண்டிருக்கின்றது
மனங்களின் மனிதங்கள்
வறண்டு கொள்ளும் போதெல்லாம்

## வாழும் குடில்

இந்த ஏழையின்
கண்ணீரில்
கீதங்கள் கசிகின்றன
அது பசியின்
அழுகுரலாக இருக்கிறது
அதன் துளிகளில்
முகாரி ராகம்
கரைந்திருக்கிறது
இந்த ஏழையின்
வாழ்க்கை, வாழும் குடில்
இரவாகவே இருக்கின்றன
இந்த உலகம்
விடியலை
தொலைத்திருக்கிறது
விடியலைத் தேட
மறந்து தவிக்கிறது

## அவளின் மூன்று புன்னகைகள்.

1..

நிலவு பற்றிய புரிதலுக்காய்
அவளைக் கொஞ்சம்
புன்னகைக்கச் சொல்லியிருந்தேன்
கூடவே நட்சத்திரங்கள்
பற்றியும் புரிந்துகொள்கிறேன்

2..

இந்த இருண்ட தனிமையில்
அவளின் புன்னகைதான்
ஆறுதலை பருக்கும்
குவளையாகின்றது

3..

கவிதைகள் தொடர்பில்
சிந்திக்கும் போதெல்லாம்
அவளின் புன்னகைதான்
தாளில் வந்து
அப்பிக் கொள்கின்றன

## தனிமை.. சருகு.. துணை..

1.
தனிமையுடன்
சிறிது நேரம்
பேசக்கிடைக்கும்
போதெல்லாம்
எனது சுவாசம்
இடஞ்சல் செய்கிறது

2.
சருகுகளோடு
விளையாடிக் கொண்டிருக்கிறது
பூனை
காற்றுக்கு இன்று
விடுமுறை

3.
துணை இழந்த
முடப்புறாவைப் போல
உன்னை இழந்து
அனாதை ஆகிறேன்
எனது கவிதை வெளியில்

## அதுபோல தான்

சில தினங்களாக என்னில்
உதிர்ந்து கொண்டிருக்கும்
அழகிய கஸல் பாடல்கள் போன்ற
நமது நினைவுகளை

சில தினங்களாக என்னில்
போர்வையாகி சுருண்டுகொண்ட
நீ பரிசளிக்கப் போவதாகச் சொன்ன
வெள்ளைநிற இரவுகளை

சில தினங்களில் என்னில்
தொலைத்துவிடுகிறேன்

சற்றுப் பொறு
மரணம் வரும்வரை

"ஏன் காத்திருக்கிறாய்
நீயே சென்று அழைத்துக் கொள்ளலாமே"

என்று நினைத்துவிடலாம் நீங்கள்
கொடுத்த பொருளை திருப்பியெடுக்க
பழக்கப்படவில்லை எனக்கு
அதுபோல தான்
உணர்வும்.. உயிரும்..

## உச்சிவெயில் சம்பவம்

வெயிலுக்குள்
புதைந்து கொண்டிருக்கும்
எனது நிழலுக்கும்
வியர்க்கிறது

நீண்ட சாலைகளில்
ஆறாய் ஓடும்
கானல் நீரில்
தவம் செய்கிறது
எனது தவிப்பு

நான்
உருகிக் கொண்டிருக்கிறேன்

கூவியழைக்கிறது
குயில்
அதன்பாடல்களில்
என்னை
மீண்டும் வார்த்தெடுக்க..

## சில தூறல்கள்..

01
வரலாற்றுக்கு முந்தைய
நிகழ்வுகளில்
இயற்கையோடு அவனும்
அவனோடு இயற்கையும்
உறவாக இருந்தது..
அவளின் கதையும்
அப்படித்தான்
அன்றோடு முடிந்திருந்தது.

02
நரிகள் பற்றியும்
சில புனைவுகளை
இன்றைய இரவிடம்
இரவல் வாங்கி வந்திருக்கிறேன்
அவை நட்சத்திரங்களை
வேட்டையாடுவது பற்றிய
வியூகங்களில் ஆழ்ந்து
தூங்கிக் கொண்டிருக்கின்றன
இன்றைய இரவு.
என்னைத் தான்
நட்சத்திர மேய்ப்பாளனாக
அமர்த்தியதை அறியாமல்

04

பிணங்களை
விதைத்த வெளியில்
முளைத்திருக்கின்றன
காளான்கள்
நிஜங்களோடு தான்
நிழல்களும்
உலாவுகின்றன
இல்லாமையில் இருந்தே
பிறந்து கொண்டிருக்கிறது
இருத்தலின் சிரிப்பு

05

பறவையிடம் அதன்
இறக்கைகளை கடனாய்
கேட்கிறேன்
பறவை சொல்கிறது

'கடன் அறிமுகத்தையும்
முறிக்கும்"

06
எனக்குள்
ஒரு ஆலமரம்
வளர்ந்திருக்கிறது
விரைவில் ஓர்
தேர்தல் நடத்திவிட வேண்டும்.
அதன் விழுதுகள்
பேய்களுக்கா?..
நரிகளுக்கா?..

த7
எனது தெருக்களில்
பெய்த மழைபோல
வற்றவும் மறுக்கிறாய்
வடியவும் மறுக்கிறாய்
கொமிஸன் கொந்ராத்தாய்
எனது இரு-தயம்!..

08
மழைத் துளிகளை
ஒவ்வொன்றாய்
பொறுக்கி எடுத்து
எனது சட்டைப்பைக்குள்
சேகரித்து வைத்திருந்தேன்
இன்று பார்க்கிறேன்
ஒரு நதி
பிரவாகமெடுத்திருக்கிறது.

09
எனது படுக்கையறை
பிரபஞ்சமாகிறது
எனது படுக்கைகூட
வானமாகிறது
நம் நினைவுகள்
என் கனவுகளாகும்
நடு இரவில்

10
நீண்டநேரமாக
எனது கதவுகளை
தட்டிக் கொண்டிருக்கின்றது
காற்று
கதவுகளை திறப்பதற்கு
அச்சமாயிருக்கிறது
தட்டுவது
காற்று என்பது
எனது யூகம் மட்டுமே..

11
நான் இந்த
மரத்தின் கீழாய்
அமர்ந்திருக்கிறேன்
மரம் நிழலாய்
கரைந்து
ஒழுகிக் கொண்டிருக்கிறது
சிறிது நேரத்தில்
பறவைகள்
புல(ன்)ம் பெயரவேண்டியது தான்

12
நரம்புகள் அறுந்த
வயலின்களால்
அலங்கரிக்கப்படுகின்றது
எனக்கான கீதம்
மூடிய அறைகளுக்குள்
மூடாமல் குளிர் காய்கின்றது
ஒரு நிமிடப் பயணத்தின்
ஒருவித சங்கீதம்.

13
நீர்த்துளிகளை
ஒன்றன் பின்
ஒன்றாக
அடுக்கி வைக்கிறேன்
பின்னர் அதை
முன் அட்டையிலிருந்து
கடைசியட்டை வரை
வாசிக்க ஆரம்பிக்கும்போது
காட்டாறாய் ஓடுகின்றன

14
காய்ந்து உதிரும்
இலைகளுக்குள்
உறங்கிக் கொண்டிருக்கின்றன
ஆயிரம் ஆயிரம் வனாந்தரங்கள்

15
புத்தனின் பெயரால்
போதி மரங்கள்
சிலுவைகளாக்கப்படுகின்றன
காருண்யம் காரிருளில் சிறைப்படுகிறது

## துளிகள் சில..

01.
ஓர்
விரல் நுனிக்குள்
அடங்கிவிடுகிறது.
விரிந்த வானத்தில்
பறக்கும் விமானம்

த2.
இராத்திரி பிரவேசங்களில்
காதல் என்ற பெயரில்தான்
கதவுகள் தட்டப்படுகின்றன!..
திறக்கிறேன் நிர்வாணம்
மலர் நீட்டுகிறது
தனிமை கொடியது

03
தனிமை உதிரும்
காலத்தில் இருக்கிறேன்
கவிதைகள் துளிர்க்கும்
போதெல்லாம்

04
பாரிய கப்பலாயிருக்கிறது
வெள்ளத்தில் அள்ளுண்ட
எறும்பிற்கு
ஒரு மெல்லிய இலை

05.
இருள் அடர்ந்த தனிமையை
சிறு சிறு நினைவுகளாக்கி
புனைவுகளில் வீசுகிறேன்
கவிதைகள்
அலை அலையாக
காகிதங்களை நனைக்கின்றன

06.
யார்
வேண்டுமானாலும்
எனது
கதவுகளைத் தட்டலாம்
உங்களது
பாதங்களின் கீழே
விரிந்து கிடக்கிறது
எனது மனது

07.
சிறகுகளற்ற
பட்டாம் பூச்சிகளுக்கு
எனது உணர்வுகளை
தானம் தரப்போகிறேன்
வேண்டியவை
விண்ணப்பிக்கலாம்

08.
காயாத தாமரையிலையில்
பனித்துளிகள் போல
உருண்டு புரள்கின்றன
தனித்த இர வின்,
எனது
ஒற்றை உறக்கம்

09.
முற்றுப் புள்ளிகளால்
ஒரு கவிதை
எழுதிக் கொண்டிருக்கிறேன்
கவிதை முடிவதற்குள்
முடிகிறது முற்றுப்புள்ளி

10.
நிலவைக் கழுவி
திண்ணையில்
காயப் போட்டிருக்கிறேன்
விடியட்டும்
உடுத்திக் கொள்ள

11.
இரவை ஊற்றித்தருகிறாள்
ஒரு கோப்பைக்குள்
குடித்து முடிவதற்குள்
விடிந்து விடுகிறது

13
நிர்வாண இரவுகளுக்குள்
கடலலைகள் வயலின்
வாசித்துக் கொண்டிருக்கின்றன!

14
ஊமைப் பொழுதுகளுக்கு
பேச கற்றுக் கொடுக்கிறது
ஓர் தெருப்பாடகனின்
பாடல்!..

15.
நிலைக் கண்ணாடியை
பார்க்கிறேன்
அவற்றி தான்
துல்லியமாக வாசிக்கமுடிகிறது
எனக்குள் மூடப்பட்டிருக்கும்
புத்தகங்கள்

15
அரசியலை
தின்று தின்று
தீர்த்து விடுகிறார்கள்
அரசியல் வாசிகள்
நமதூர்
விருந்தோம்பலின்
நம்பிக்கையில்

## அசரீரி

மரணத்தின் அசரீரி
தட்டி அழைக்கிறது என்னை
மறக்கடித்த ஆழ்ந்த தூக்கத்தில்
மிதக்கிறேன்
கனவுகள் ஆசைகள் காற்றாய்
மிதக்கச் செய்கின்றன
மரணத்தின் அசரீரி
தட்டி அழைக்கிறது

## இளகிய ஆன்மா

சபிக்கப்பட்ட சனங்களாய்
துயர்வடியும் அகதிமனதுடன்
உனது வார்த்தைகளில்
மயானங்களின் நள்ளிரவை
சுவாசிக்க நேரும்போது
எனது இளகிய ஆன்மா
ஏழு வானங்களுக்கு அப்பால்
என்னை சுமந்து செல்கிறது..

## சம்பவம்

சில வருடங்களுக்கு முன்னர்
தொலைந்துபோன நிலவு
இன்று கடற்கரை மணலில்
கரையொதுங்கியிருக்கிறது
கூடவே பல கிரகங்கள்

## பேனை பற்றியதான புரிதல்

இரவின் நரம்புகளில்
ஊர்ந்து செல்லும் பாம்புகள்
வெண்ணிற கனவுகளில்
ஆன்மாவின் தொன்மத்தை
திறந்துவிடுகிறது
என கவிதையொன்றை
எழுத காகிதத்தை தேடுகிறேன்
காகிதம் கனவாகவும்
எழுத்துக்கள் அல்லது
கவிதைகள் பாம்பாகவும்
மாறிவிடுகின்றன
பேனை பற்றியதான புரிதல்
இன்னும் எனக்குள்
நிரப்பப்படவில்லை

## இயற்கைதானே

அறைச்சுவர்களில் வரையப்பட்ட காடு
பச்சை இரவை உதிர்த்திவிடுகிறது
மெல்லிய குளிரால் திறக்கப்படும் கதவு
அறைக்குள் நிலவை மலரச் செய்கிறது
தனிமையோடு சஞ்சரிக்கப்பழகிய மனதை
கவிதையால் நிரப்பும் நிகழ்வில்
புனைவை புனிதத்தால் தடவி விடுகிறது
ஜன்னலறைக்குள் சிறைப்பட்ட நட்சத்திரங்கள்
என் ஆன்மாவை விடுதலை செய்கின்றன
வாசிப்பு ஒரு அலாதியான அனுபவந்தான்
இயற்கையை வாசிக்கத் தெரிந்தவனுக்கு
பிரபஞ்சமும் இயற்கைதானே..

## எனக்குள்

ஒரு
போர்வையும்
த்னிமையுமாய்
நானை இழந்து
மிதக்கிறேன்
ஆனந்தத்தில்..
என்
சுவாசத்தை
கொன்று விடுகிறது
ஆனந்தம்..
என்னைமீண்டு
எழச்செய்கிறது தனிமை
உன்னை எனக்குள்
ஊற்றி ஊற்றி...

1
துயரத்தைப் போதிப்பவள்
இன்று குதூகலமாக
என்னைக் கடந்து
செல்கிறாள்
2
தூக்கம்
இன்னும் விழிக்கவில்லை
ஆனால் நான்
அப்போதே விழித்துவிட்டேன்

## நானாக

மையங்கள் அற்றதாய்
சிதறடிக்கப் படுகின்றன
எனது இலட்சியங்கள்
விளிம்புகள் வழியே
பூனைகள் பதுங்குவதாய்
உணர்கிறேன்
பிரபஞ்சம் புதுப்பிக்கப்படும்
நானும் புதுப்பிக்கப்படுவேன்
அதற்குள் நான்
நானாக வேண்டிவரும்

**ஆதி ரா**

நீ பேசாத நிமிடங்கள்
மரணத்தைக் கொண்டு சபிக்கின்றன
கொலையுண்ட எனது தூக்கம்
உனது மடியில் வீழ்ந்து
துடி துடிக்கிறது
சுவாசத்தை இழந்து
தவிக்கிறேன் நான்
என் சுவாசமே ஆதி ரா..
உனது பேச்சில் தான்
என் உயிர் ஒளிருமடி,
எப்போது மொழியப் போகிறாய் நிலவை சொல்
ரா...

நன்றிகள்!..

❖ பத்திரிகைகள்
➢ தினக்குரல்
➢ வீரகேசரி
➢ நவமணி
➢ யாழ் உதயன்
❖ சஞ்சிகைகள்
➢ ஜீவநதி
➢ படிகள்
➢ மாதவம் (இந்தியா)
➢ மகாகவி (இந்தியா)
❖ இனையங்கள்
➢ மலைகள்
➢ எழுத்து
➢ தமிழருவி
➢ thecatamaran.org
❖ வசந்தம் ரீவீ நண்பர்கள்
❖ அகர ஆயுதம்
❖ நிந்தவூர் கலை, இலக்கியப் பேரவை
❖ நிந்தவூர் கலை, இலக்கிய அதிகாரசபை
❖ புதுப் புனைவு கலை இலக்கிய வட்டம்
❖ பெருவெளி செயற்பாட்டாளர்கள்
❖ அனைத்து கலை, இலக்கிய மற்றும் சமூக உறவுளுக்கும்..




நிந்தவூர் மண்ணுடல் என் தொடர்ச்சியாய் கவி நரம்பில் என் இலக்கியக் குருதி கொண்டு ஓடி உயிர்த்தலில் எனக்குள் அதிக சக்தி பிறந்திருக்கிறது.

இலக்கியன் எனது இன்னொரு காலாய் கவிதைச் சாலையில் பயணிப்பதும், முர்சித் எனது இன்னொரு சிறகாய்ப் பெருவெளியில் பறப்பதும் தமிழின் திசை நோக்கியதும் கவிதையின் விசை கொண்டதுமான செயல்.

நவீன கவிதை மரபில் ஒரு புயல் வேகத்துடனும், வாழ்வியலின் வண்ண வண்ணத் தெருக்களில் ஒரு பட்டாம் பூச்சி அழகுடனும், பச்சைப்பசேலென்ற எழுத்துப் புல் வெளியில் மலர்ச்சி காட்டுகின்ற பனித்துளிகள் குளிர்ச்சியுடனும், ஒரு கோடை காலத்து வெப்பம் நீக்கும் அடை மழையுடனும் இலக்கியனின் எழுத்துக்கள் பிறப்பெடுத்துள்ளன.

எனது இலக்கியப் பாதச் சுவட்டில் என் கூடவே பாதம் பதித்து, என் எழுத்து விரல் கோத்து எனது குடும்ப வேரில் ஒரு பலமிக்க வளம் நிறைந்த கிளையாய் இலக்கியன் உருவாகி வருவது தமிழின் கண்கொள்ளாக் காட்சி.

உன் வாசலில் இருந்து என் முற்றம் வரைக்கும் என் வாழ்த்துப் பட்டுக் கம்பளம் எப்போதுமே விரிந்தே கிடக்கும். உனது எழுதுகோல் ஒற்றைப் பாதம் நடக்கவும் ஓடவும் பாயவுமென உனது வயலில் எனது வாழ்த்துமழை ஆயுள் கடந்தும் பொழியும்.

ஆழி தோற்றுப் போகும் பாசத்துடன்.

அண்ணன்
ராஜகவி ராகில்

ISBN 978-955-7256-00-9